பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
08 07 2026 WEDNESDAY 12.40 PM
ஆகாஷ்வாணி

**தலைப்புச் செய்திகள்**

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மெல்போர்னில் நடைபெறும் இந்தியா — ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

2. இந்தியா — இந்தோனேஷியா இடையேயான கலாச்சார உறவுகளுக்கு எடுத்துக்காட்டாக **Prambanan** மும்மூர்த்தி கோவில் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. கேரளம் மாநிலம் வயநாட்டில் நேரிட்ட மண் சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

4. ஈரானில் உள்ள **80** இடங்களில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

5. அமெரிக்க சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் — அமெரிக்காவின் **Joshua Sheehy** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மெல்போர்ன் நகரில் நடைபெறும் இந்தியா — ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

ஆஸ்திரேலியா பிரதமர் திரு **Anthony Albanese**-வுடன் இந்த மாநாட்டில் பங்கேற்கும் அவர், இருநாட்டு வர்த்தகர்களுடனும் பேச்சு நடத்துகிறார்.

பின்னர், ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இருநாடுகளுக்கு இடையே பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விவாதிக்க உள்ளார்.

இந்தியா — ஆஸ்திரேலியா இடையேயான வர்த்தகத்தை **3** ஆயிரத்து **300** கோடி டாலரிலிருந்து **2030**-ஆம் ஆண்டுக்குள், **10** ஆயிரம் கோடி டாலராக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

இந்தியா — இந்தோனேஷியா இடையேயான கலாச்சார உறவுகளுக்கு எடுத்துக்காட்டாக **Prambanan** மும்மூர்த்தி கோவில் திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

Yogyakarta-வில் யுனஸ்கோ உலக பாரம்பரிய சின்னமான இந்த கோவிலுக்கு அந்நாட்டு அதிபர் திரு Prabowo Subianto-வுடன் திரு நரேந்திர மோடி சென்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், பழமையான கோவிலை பராமரித்து வருவதற்கு இந்தோனேஷிய மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அந்நாட்டில் உள்ள கோவில்களை இந்தியாவின் உதவியுடன் பராமரித்து வருவது இருநாடுகளுக்கு இடையேயான கலாச்சார உறவுகளின் எடுத்துக்காட்டாக திகழ்வதாக திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்தோனேஷியாவில் உள்ள கோவில்களை பராமரிப்பதற்கு இந்தியா அளித்துவரும் உதவிகளுக்கு அந்நாட்டு அதிபர் திரு Prabowo நன்றி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இந்தோனேஷியாவில் உள்ள கோவில்களை பராமரிப்பதற்கான திட்டத்தை இந்தியா செயல்படுத்தி வருகிறது.

அந்நாட்டில் உள்ள 224 கோவில்களை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதில் ஆறு கோவில்கள் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த **200** கோவில்களை சீரமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் கோவில்களின் வடிவமைப்பை உறுதி செய்தபின் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒன்பதாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட **Prambanan** கோவில் இந்தோனேஷியாவில் உள்ள இந்து கோவிலாகும்.

**1991-**ஆம் ஆண்டில் இந்த கோவில் யுனஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை கல்விக்கழகத்தின் வெளிநாடு மையம் இந்தோனேஷியாவில், அமைக்கப்பட உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் — இந்தோனேஷியாவும் உயர்கல்வித்றையில் ஒருங்கிணைந்து செயல்படுவதன் எடுத்துக்காட்டாக இது திகழும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாவில் உள்ள சிங்கசாரி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் இந்த மையம் செயல்படும் என்றும் கூறியுள்ளார்.

இதன்மூலம், அந்நாட்டில் உள்ள மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

நாட்டின் கைத்தறித் துறையை மேம்படுத்தும் வகையில், **Handloom Hackathon**-ஐ மத்திய ஜவுளித்துறை தொடங்கியுள்ளது.

தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த **Hackathon**-ல் பங்கேற்க வரும் **20**-ஆம் தேதிவரை இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வடிவமைப்பாளர்கள், தொழில் முனைவோர்கள், கைத்தறித்துறை ஆர்வலர்கள் **www.youthideathon.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி ஐ ஐ டி தில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் **Hackathon** இறுதிப்போட்டி நடைபெறும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கைத்தறித்துறையில் இளைஞர்களின் பங்களிப்பை ஊக்கவிக்கும் வகையில் **Handloom Hackathon** நடத்தப்பட உள்ளதாக ஜவுளித்துறை ஆணையர் டாக்டர் பீனா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

பிரிக்ஸ் மகளிர் அமைச்சர்கள் அளவிலான கூட்டம் கேரள மாநிலம் கொச்சியில் இன்று தொடங்கியது.

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் பெண் அமைச்சர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மகளிர் மேம்பாடு குறித்து முக்கியமாக விவாதிக்கப்படுகிறது.

<<<<<<>>>>>>

கேரளம் மாநிலம் வயநாட்டில் தொடர் மழையால் ஏற்பட்ட மண் சரிவில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு **V D** சதீசன் அறிவித்துள்ளார்.

வயநாட்டில் சாலை அமைப்பதற்கான சுரங்கப் பணிகளின்போது அகற்றப்பட்ட மண், மழை வெள்ளத்தால் அடித்து வரப்பட்டதால் இந்த மண் சரிவு ஏற்பட்டது.

இந்த மண்சரிவில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஐந்து பேரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

தேசிய பேரிடர் மீட்புப்படை குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>>

ஈரானில் உள்ள **80** இடங்களில் அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

**Hormuz** நீரிணை பகுதியில் வணிக கப்பல்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஈரானின் போர் விமான கட்டுப்பாட்டு மையங்கள், கடலோர ரேடார் மையங்கள், ஏவுகணை தளங்கள் மற்றும் அந்நாட்டு கடற்படையின் படகுகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளது.

வணிக கப்பல்கள் மீதான ஈரானின் தாக்குதலை நிறுத்துவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளது.

ஈரானின் **Bandar Abbas, Sirik** உள்ளிட்ட நகரங்களில் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இதற்கு தக்க பதிலடி அளிக்கப்படும் என்று ஈரான் ராணுவம் கூறியுள்ளது.

இதனிடையே, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயை விற்பனை செய்வதற்கு ஈரானுக்கு அளித்த உரிமம் ரத்து செய்யப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஒடிஷாவின் பூரி ஜெகன்நாதர் கோவிலில், **Anasar** நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஜெகன்நாதர், பலபத்ரர், சுபத்ரா ஆகியோரின் சிலைகளுக்கு புனித **Anasar** பூஜை நடத்தப்படுகிறது.

அப்போது, இயற்கை மூலிகைகளை கொண்டு திருமஞ்சனம் செய்யப்பட்டது.

கோவிலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரின் சோஃபியான் மாவட்டம் சாணப்புரா பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது தீவிரவாதி ஒருவர், சுட்டுக்கொல்லப்பட்டார்.

ராணுவம், மத்திய ரிசர்வ் காவல்படை இணைந்து நடத்திய இந்த தேடுதல்

வேட்டையின்போது இந்த தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த தீவிரவாதியிடமிருந்து துப்பாக்கி மற்றும் வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைவர் திரு **V K Birdi** தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

அமர்நாத் புனித யாத்திரை மேற்கொண்டுள்ள யாத்ரிகர்கள் பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

யாத்திரை மேற்கொள்வோர் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டும் என்றும், பதிவு செய்யப்பட்ட தேதியில் மட்டுமே யாத்திரையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பதிவு செய்யாதவர்கள் யாத்ரிரை மேற்கொள்ளக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

அமர்நாத் குகைக் கோவிலில் பதிவு செய்த யாத்ரிகர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ஷார்ஜாவில் இருந்து பாகிஸ்தானின் கராச்சி நோக்கி சென்ற சரக்கு விமானம் விபத்துக்கு உள்ளாகியிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாக பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

கராச்சியில் இருந்து 300 கிலோமீட்டர் தொலைவில் இந்த விமானத்தின் தகவல் தொடர்பு ரேடாரிலிருந்து துண்டிக்கப்பட்டது.

தொழில்நுட்ப கோளாறு இருப்பதாக விமானத்தின் விமானி, கராச்சி விமான நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார்.

அதற்கு பின்னர், இந்த விமானம் உடனான அனைத்து தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் ஐந்து விமானிகள் சென்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவின் மழை நிலவரம் குறித்து அம்மாநில முதலமைச்சர திரு தேவேந்திர பட்நவிஸிடம், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொலைபேசி மூலம் கேட்டறிந்தார்.

மழை நிவாரணத்திற்காக மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று அப்போது அவர் உறுதியளித்தார்.

கடந்த சில நாட்களாக மகாராஷ்டராவின் பல்வேறு பகுதிகள் தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் — அமெரிக்காவின் **Joshua Sheehy** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **6-3, 7-5** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Mitchell— Spencer Papa** இணையை வென்றது.

-------------

ஸ்வீடனில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே — தைவானின் **Yu-yun Li** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை **6-3, 1-6, 10-8** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Moyuka** — இங்கிலாந்தின் **Emily Smith** இணையை வென்றது.

------------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

காலிறுதி ஆட்டங்களில் பிரான்ஸ் — மொராக்கோவையும், ஸ்பெயின் — பெல்ஜியத்தையும், நார்வே — இங்கிலாந்தையும், அர்ஜென்டினா — ஸ்விட்சர்லாந்தையும் எதிர்கொள்கின்றன.

----------------

விம்பிள்டன் ஜூனியர் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் **Arnav Paparkar** இன்று ஜப்பானின் **Tabata-**வை எதிர்கொள்கிறார்.

**<<<<<<END>>>>>>**